நிதி ஆதாரம் இல்லாததால் அரசே அந்த பாழ்பட்ட குழாய்களை மாற்றி புதுக் குழாய்களை அமைத்து இந்த ஊர் மக்களுக்கு தண்ணீர் அளிக்க, முறையாக விநியோகம் செய்ய அரசு முன்வருமா? அதேபோல, அருகிலேயுள்ள முத்தலாபுரம் பஞ்சாயத்திலேயுள்ள குழாய்களிலே வேர்கள் புகுந்து, தண்ணீர் செல்வதைத் தடுத்து, விநியோகம் பாதிக்கப்படுகிறது. இவற்றையும் மாற்றிதர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழாய்களை மாற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியம் அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் நடவடிக்கை எடுத்து அதை நிவர்த்தி செய்வதற்கு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஏ. ஹக்கீம்.

திரு. எம்.ஏ. ஹக்கீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவைப் போடுகிறபோது, பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதி எனக்கு அடிஷனலாகத் தேவைப்படுகிறது. திருமங்கலம் தொகுதியில்—நீங்கள் பேரவைத் தலைவராக இருக்கின்ற காரணத்தால் கேள்வி கேட்க முடியாத காரணத்தால், வாக்காளர் என்ற முறையில் நான் கேள்வி கேட்கலாம் என்று ஆசைப்படுகிறேன். திருமங்கலம் தொகுதியில்—திருமங்கலம் நகர மன்றத்தில், அங்கே வாழக்கூடிய 30,000, 40,000 மக்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹக்கீம், இது கேள்விக்குத் தொடர்பற்றது.

திரு. எம்.ஏ. ஹக்கீம்: இல்லை, இல்லை. குழாய்க்காகக் கேட்கிறேன்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 60, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

60—

சோடியம் மின் விளக்குகள்

***6756—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2002 ஏப்ரல் 2]

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியிலுள்ள காரியாப்பட்டி, மல்லாங்கிணறு ஆகிய பேரூராட்சிகளில் சோடியம் மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியில் உள்ள காரியாப்பட்டி பேரூராட்சியில் 60 சோடியம் ஆவி விளக்குகளும், 497 குழல் விளக்குகளும், 2 மெர்க்குரி விளக்குகளும், ஒரு ஹை-மாஸ் விளக்கும், ஆகமொத்தம் 560 மின்விளக்குகள் உபயோகத்தில் உள்ளன. மல்லாங்கிணறு பேரூராட்சியில் 60 சோடியம் ஆவி விளக்குகளும், 236 குழல் விளக்குகளும், ஆகமொத்தம் 296 மின் விளக்குகள் உபயோகத்தில் உள்ளன. எனவே, இவ்விரு பேரூராட்சிகளிலும் கூடுதலாக சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும்பட்சத்தில் மின்கட்டணம், உபகரணங்கள் மற்றும் தொடர் பராமரிப்புச் செலவினத்தால் கூடுதல் செலவின வகையில் பேரூராட்சிக்கு நிதிச் சுமை ஏற்படும். எனவே, காரியாப்பட்டி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சிகளுக்கு புதியதாக சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். இந்தத் தொகுதியில் காரியாப்பட்டி, மல்லாங்கிணறு ஆகிய இரண்டு பேரூராட்சிகள் மட்டும்தான் இருக்கின்றன. ஒவ்வொரு பேரூராட்சியிலும் 25,000-க்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். எனவே, மேலும் அங்கே மின் விளக்கு வசதி தேவைப்படுகிறது. சோடியம் விளக்குகள் அமைக்காத பட்சத்தில், குழல் விளக்குகளை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழல் விளக்குகள் அமைப்பதற்கு அந்தந்தப் பேரூராட்சிகளில் நிதிநிலையைப் பற்றி எங்களுக்குத் தீர்மானம் போட்டு அனுப்புகிறபோது அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.